# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 008/பேரூ/2023**

**நாள்: 15.02.2023**

திரு. E.E. பாலாஜி,
பொதட்டூர் பேட்டை,
திருவள்ளூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பொதட்டூர்பேட்டை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர் பேட்டை, சிலம்புபாளையம் தெரு, எண்.4 என்ற முகவரியில் வசிக்கும் திரு. E.E. பாலாஜி என்பவரின் 16.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.01.2023 அன்று பெறப்பட்டு 008/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர் பேட்டை, சிலம்புபாளையம் தெரு, எண்.4 என்ற முகவரியில் வசிக்கும் திரு. E.E. பாலாஜி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

“திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், 11, பொதட்டூர்பேட்டை, (கிழக்கு) வருவாய் கிராமத்தில் உள்ள சர்வே எண்.128/1B நல்லதண்ணீர் குளம், குளம், குளக்கரை புறம்போக்கில் அரசுக்கு சொந்தமான நீர்நிலையில் பல தனிநபர் ஆக்கிரமிப்பாளர்களால் முழுவதுமாக ஆக்கிரமிக்கப்பட்டு வீடுகள் கட்டி உள்ளனர். ஆகையால், மேற்கண்ட நீர்நிலைகள் மக்கள் மற்றும் கால்நடைகள் முழுமையாக பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், நிலத்தடி நீரும் குறைந்து சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மழைக்காலங்களில் நீர் சேமிக்கப்படாமல் வீணாகி வறண்டே கிடக்கிறது. மேற்கண்ட சர்வே எண். 128/1B-ல் நல்லதண்ணீர் குளம், குளக்கரை புறம்போக்கு, பொதட்டூர் பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட அரசுக்கு சொந்தமான இடம் ஆகும். ஆகையால், பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு மேற்படி சட்டப்படி மற்றும் விதிகளின்படி ஆக்கிரமிப்பு அகற்ற முழு அதிகாரம் உள்ளது. ஆனால் பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் எந்தவிதமான நடவடிக்கையும்

எடுக்கவில்லை. ஆகவே தயவு செய்து தாங்கள் விசாரணை செய்து, மேற்படி குளக்கரையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட உத்தரவிடுமாறு (பரிந்துரை) பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

(2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 31.01.2023 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 06.02.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.128/1பி பகுதியில் உள்ள நல்லதண்ணீர் குளக்கரை பகுதியில் தனியர்கள் குளக்கரையினை ஆக்கிரமிப்பு செய்து, வீடுகள் மற்றும் கட்டடங்கள் கட்டப்பட்டு சுமார் 35 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருகின்றனர்.

மனுதாரர் திரு. இ.இ.பாலாஜி என்பவரால் பொதட்டூர் பேட்டை சர்வே எண். 128/1Bல் அமைந்துள்ள நல்லதண்ணீர் குளக்கரையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் கட்டடங்களை அப்புறப்படுத்திட வேண்டி அளிக்கப்பட்டுள்ள மனுவினை பேரூராட்சியின் 06.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் திருவள்ளூர், பள்ளிப்பட்டு வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டு, ஆக்கிரமிப்பினை அகற்றிட வேண்டிய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 09.02.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 31.01.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. E.E. பாலாஜி, 09.02.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்காணும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 128/1B பகுதியில் உள்ள நல்லதண்ணீர் குளத்தை பல தனிநபர்கள் ஆக்கிரமித்து கான்கிரீட் வீடுகளையும், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கொண்ட வீடுகளையும் கட்டியுள்ளனர். மேற்கண்ட குளத்தை ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்துள்ளதால், அக்குளத்தின் நீர் ஆதாரத்தை நாங்களும், அங்கு வாழும் கால்நடைகளும் பயன்படுத்த இயலவில்லை. மேற்கண்ட அரசுக்கு சொந்தமான இடத்தை சிறிது சிறிதாக ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், அக்குளத்தில் தண்ணீர் சேருவதும் குறைந்து, பெருமளவு வற்றி காணப்படுகிறது. மேற்கண்ட ஆக்கிரமிப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு பல்வேறு மனுக்கள் அனுப்பப்பட்டும் அவர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை இம்முறை மன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே மேற்கண்ட குளத்தையும், குளத்தை சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற ஆவன செய்யுமாறும், மேற்கண்ட குளத்தினால் எங்கள் பகுதி மக்களுக்கு குடிநீர் கிடைத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் ஆகியோருக்கு மனு அளிக்கப்பட்டு, அதற்கு அவர்கள் அளித்த பதில் கடிதத்தின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமாப்பிக்கிறேன்.

(5) எதிர்மனுதாரரான பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. J. பிரகாஷ் என்பவர் 09.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

“மனுதாரர் குறிப்பிட்டுள்ள பொதட்டூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண் 128/1B பகுதியில் உள்ள நல்ல தண்ணீர் குளக்கரை பகுதியில் ஒருசிலர் குளக்கரையை ஆக்கிரமித்து வீடுகளை கட்டி சுமார் 35 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருகின்றனர். மேற்கண்ட இடத்தை ஆய்வு செய்ததில் மேற்கண்ட இடம் கிராம நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆக்கிரமிப்பு தொடர்பான புகாரையொட்டி, மேற்கண்ட குளக்கரைப் பகுதியை அளவீடு செய்து ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் கட்டடங்களை அகற்றிட 6.2.2023 அன்று பள்ளிப்பட்டு வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதையும், மேலும் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து தொடர் நடவடிக்கைகள் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்’’ எனத் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பான A Register நகல் மற்றும் FMB யின் நகல்களை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டையைச் சார்ந்த மனுதாரர் திரு. E.E. பாலாஜி என்பவர் தனது 16.01.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பொதட்டூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட அரசுக்கு சொந்தமான பொதட்டூர்பேட்டை (கிழக்கு) கிராமத்தில் உள்ள சர்வே எண்.128/1Bல் அமைந்துள்ள குளக்கரை பகுதியினை ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் ஆக்கிரமிப்புதாரர்களால் கட்டப்பட்டுள்ளதை அகற்றிட வேண்டி புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கப்படும் பொதட்டூர்பேட்டை (கிழக்கு) சர்வே எண்.128/1B இடமானது வருவாய்த் துறை ஆவணப்படி “கிராமநத்தம்’’ என்கிற வகைப்பாட்டில் பதிவாகியுள்ளது ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது. இருப்பினும், மேற்படி சர்வே எண்ணில் அடங்கிய இடத்தில் நல்லதண்ணீர் குளம் அமைந்துள்ளது என்றும் மனுதாரர் வாக்குமூலத்தின் போது தெரிவித்துள்ளார். பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரும் மேற்படி நகர்புல எண்.128/1Bல் உள்ள குளக்கரை பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, ஆக்கிரமிப்புதாரர்களால் வீடுகள், கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என தனது விளக்க அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது. மேலும், மனுதாரர் திரு. E.E. பாலாஜி என்பவர் அளித்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட கோரும் மனுவினை உரிய பரிசீலனை செய்யும் பொருட்டு பொதட்டூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் 6.2.2023 நாளிட்ட கடிதம் மூலம் பள்ளிப்பட்டு வட்டாட்சியருக்கும் அனுப்பப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

நீர்நிலைகளின் மீது ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டடங்களை அகற்றிட வேண்டும் என மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமும், உச்சநீதி மன்றமும் பல்வேறு வழக்குகளில் தீர்ப்புரைகள் வழங்கியுள்ளன.

இந்நிலையில் பொதட்டூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.128/1B இடத்தினை, செயல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியருடன் ஆய்வு செய்து, ஆட்சேபணைக்குரிய ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் செயல் அலுவலருக்கு உத்திரவிடுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்த முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாளை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. இ.இ. பாலாஜி,
   த/பெ. ஏகாம்பரம்,
   4, சிலம்புபாளையம் தெரு,
   பொதட்டூர்பேட்டை – 631 208.
   பள்ளிப்பட்டு வட்டம்,
   திருவள்ளூர் மாவட்டம்.

2. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   திருவள்ளூர் மாவட்டம்.

3. செயல் அலுவலர்,
   பொதட்டூர்பேட்டை பேரூராட்சி,
   திருவள்ளூர் மாவட்டம்.

4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

5. இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
   சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்.